இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 05
LWU 3315/4312/4335 – பகிரங்க சர்வதேச சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 25.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. (அ) அரசுகளுக்கிடையே காணப்படும் முரண்பாடான அக்கறைகள் காரணமாக சர்வதேச சட்டத்தில் பொருத்தணைகள் ஆக்குதல் என்ற விடயம் இலகுவான காரியம் ஒன்றல்ல. பன்மைத்துவ அக்கறையுடைய திறத்தவர்களிடையே உடன்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடத்தக்களவு சமரசம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

   சர்வதேச சட்டத்தின் தோற்றுவாய் ஒன்றாக பொருத்தணைகளின் பங்களிப்பை ஆராய்க.

   (ஆ) லிமா, உலகின் வறிய நாடுகளின் பட்டியலிலே 52வது இடத்தை பிடித்துள்ள புவி மத்திய கோட்டிற்கு அண்மையில் உள்ள சுதந்திர அரசு ஒன்றாகும். எவ்வாறாயினும் லிமா, செற்றலைட் ஒன்றை அமைக்கும் நோக்குடன் சர்வதேச தொலைதொடர்பு சங்கத்தின் புவிசார் நிலையியல் சுற்றுவட்டத்தில் (Geo Stationary Orbit (GSO) ) மூன்று அமைவிடங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு தனது பெயரை பதிவு செய்து கொண்டது. சர்வதேச தொலைத்தொடர்பு வியாபாரத்தின் மீது ஜேர்கிஸ்தான் என்ற பணக்கார நாடு ஆர்வம் கொண்டிருந்தது. எனினும் அந்நாட்டினால் செற்றலைற்றை பொருத்துவதற்கான அமைவிடத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஜேர்கிஸ்தானுக்கு செற்றலைற்றிற்கான அமைவிடம் ஒன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கான சாத்திய தன்மை தொடர்பில் அயல் நாடான ராமஸ்தானுடைய ஜனாதிபதி லிமாவினுடைய ஜனாதிபதியை கலந்தாலோசித்தார். ஆயின் அமைவிடம் எதனையும் குத்தகைக்கு வழங்க லிமா ஜனாதிபதி மறுத்து விட்டார். சில நாட்களுக்கு பின்பு லிமா ஜனாதிபதி, ராமஸ்தான் ஜனாதிபதியிடம் இருந்து செய்தியொன்றை பெற்றுக் கொண்டார். அச் செய்தியிலே இரண்டு வருடங்களுக்கு முன்பு ராமஸ்தான், லிமா ஆகிய நாடுகளிடையே செய்து கொள்ளப்பட்ட மரத்துக்கான உணவு உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்தது. இதன் விளைவாக ஜேர்கிஸ்தானுக்கு அமைவிடம் ஒன்றை வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்றில் லிமா ஈடுபட்டது. அதன் பின்பு ஜேர்கிஸ்தான் லிமாவிற்குரிய மூன்று அமைவிடங்களையும் பயன்படுத்தி மூன்று செற்றலைட்டுக்களை அமைத்துக்கொள்ளப்போவதாக லிமா அறிந்து கொண்டது. இவ்விடயம் தொடர்பில் லிமாவிற்கு காணப்படக்கூடிய பரிகாரங்கள் பற்றி அறிந்து கொள்ள லிமாவினுடைய ஜனாதிபதி உமது ஆலோசனையை நாடுகின்றார்.

   அவருக்கு ஆலோசனை வழங்குக.

2. கால் (Gaul) குடியரசின் உள்விவகார அமைச்சர் திரு. டின் டின் சர்வதேச மகாநாடு ஒன்றிலே கலந்து கொள்வதற்காக மிஸ்டாக்கா என்ற கூட்டாட்சி அரசுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். வழமை போலவே அமைச்சக பிரதிநிதிகள் அமைச்சு அதிகாரிகளையும் அரசாங்கத்தினால் அனுசரனை வழங்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளில் குடும்ப உறுப்பினர்களுக்கு மேலதிகமான இரண்டு

அந்தரங்க காரியதரிசிகளும் மூன்று மெய்பாதுகாவலர்களும் மற்றும் நான்கு மனித உரிமை செயற்பாட்டாளர்களும் உள்ளடங்கி இருந்தனர். மாநாட்டிற்கு முதல்நாள் திரு டின் டின் தனது மனைவியுடன் கடை வீதிகளுக்கு சென்றார். திரு. டின் டின் ஒரு கடையில் இருந்து 3 பளிங்கு ஆபரணங்களை திருடினார். அவருடைய மகன்மார்கள் இரவு நேரத்தில் கசினோ விளையாட்டுக்கு சென்றதோடு அங்கு குடிபோதையில் ஏற்பட்ட சண்டையின் போது மதுபான சாலை உத்தியோகத்தர் ஒருவரை தாக்கி கொலைசெய்தனர்.

மறு நாள், மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த போது மெய்பாதுகாவலர்கள் வீதியில் இறங்கி ஹொட்டலுக்கு முன்பாக கலகம் ஒன்றிலே ஈடுபட்டதுடன் பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தினர்.

இங்கு தலையிட்டுள்ள சட்ட விடயங்களை ஆராய்க.

3. அண்மையில் நியமிக்கப்பட்ட இராஜரீக உறவுகளுக்கான தெரிவுசெய்யப்பட்ட குழு,இராஜரீக உறவுகளுக்கான 1961ஆம் ஆண்டின் வியன்னா உடன்படிக்கையில் பின்வரும் உறுப்புரை 22, 27, 30 ஆகியவற்றை சேர்ப்பதன் மூலமாக அவ் உடன்படிக்கையில் மாற்றங்களை செய்ய வேண்டுமென பிரேரனை ஒன்றை செய்தது.(பிரேரிக்கப்பட்ட மாற்றங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன)

உறுப்புரை 22.

1. தூதரகத்தினுடைய வளவுகள் அத்து மீறப்பட முடியாதவை. அனுமதிக்கும் அரசினுடைய முகவர்கள், தூதரக தலைவருடைய சம்மதமின்றி வளவக்குள் பிரவேசிக்க முடியாது. (எவ்வாறாயினும், அனுமதிக்கும் அரசினுடைய முகவர்கள் தேசிய பாதுகாப்பு பொது ஒழுங்கு என்பவற்றில் அக்கறை கருதி முன் அனுமதி இன்றி வளவுக்குள் பிரவேசிக்கலாம).

3 (அரசினால் தூதரகத்தின் நடத்தை காரணமாக தேசிய பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்குக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்ற சந்தர்ப்பங்கள் தவிர) வளவுகள், அதனுடைய தளபாடங்கள் மற்றும் அங்குள்ள ஏனைய சொத்துக்கள், போக்குவரத்து வழிமுறைகள் தேடுதல், தேவைகோரிக்கை, நடுக்கட்டல் அல்லது உறுதி முடித்தல் என்பவற்றில் இருந்து விடுபாட்டு உரிமையை பெறுகிறது.

உறுப்புரை 27

2. இராஜரீக பொதி திறக்கப்படவோ அல்லது தடுத்து வைக்கப்படவோ கூடாது. (எவ்வாறாயினும் இந்த உறுப்புரைக்கு அமைவாக அனுமதிக்கும் அரசு நியாயமான அடிப்படைகளில் இராஜரீக பொதிகளை புலனாய்வு செய்யும் உரிமையை தக்கவைத்துக் கொள்ளலாம).

உறுப்புரை 30.

1. அரசினால் தூதரகத்தின் நடத்தை காரணமாக தேசிய பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்குக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்ற சந்தர்ப்பங்கள் தவிர) இராஜரீக முகவருடைய தனிப்பட்ட வசிப்பிடம் தூதரக வளவுடைய பாதுகாப்பு மற்றும் அந்து மீறப்பட முடியாத தன்மை போன்ற உரிமைகளை அனுபவிக்க முடியும்.

சிலிங்கோ நாட்டின் வெளிவிவகார அமைச்சர் உடன்படிக்கைகுரிய உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் அல்லது சேர்ப்புகள் பற்றி உமது ஆலோசனைரயை நாடுகின்றார்.

இம்மாற்றங்களுடைய சட்ட நடைமுறைகள் பற்றி ஆலோசனை வழங்குக.

4. (அ) அரசு ஒன்று சர்வதேச சட்டத்தில் ஆட்புலத்திற்கு அப்பாற்பட்ட நியாயாதிக்கத்தை பிரயோகிக்கக்கூடிய பல்வேறுபட்ட வழிகளை விளக்குக.

(ஆ) சில்வலேண்டின் பிரஜை ஒருவரான மார்க் என்பவர் சில்வலேண்டின் பதிவு செய்யப்பட்ட மக்ரோ ஸொப்ட் கம்பனியின் முகாமையாளராவார். இக் கம்பனி பைன்அப்பிளி வியாபார குறியுடைய கணினிகளை உற்பத்தி செய்கிறது. அக்கணனிகளுக்கு சந்தையில் பெரிய கேள்வி காணப்படுகிறது. மார்க் கோல்ட்லாண்டில் இருந்து சில்வலாண்டிற்கு சிப்ஸ்களை(chips) ஏற்றுமதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கிறீக்காவில் வைத்து கைது செய்யப்பட்டார். இந்த சிப்ஸ்கள் கிறீக்காவில் பதிவு செய்யப்பட்ட பியூச்சர் டெக்னிக் கம்பனியால் மக்ரோ ஸொப்ட் குருவ், சிப்ஸ்களை மூன்றாம் நாடுகளின் வாடிக்கையாளர்களுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட முடியாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் மக்ரோ ஸொப்ட் குருப்பிற்கு விநியோகிக்கப்படுகிறது.

மார்க்கிற்கு ஆலோசனை வழங்குக. உமது விடைக்குரிய காரணங்களை தருக.

5. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு நிரந்தர பிரதிநிதிகளுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்குரிய ஏராளமான அழைப்புகள் காணப்படுகின்றன. இந்தியா உட்பட பல்வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலம்பொருந்திய நாடுகளாக மாறிக்கொண்டு வருகின்றன. எனவே அதிகார சமப்படுத்தல் மற்றும் வியாபக அக்கறைகளை உறுதிப்படுத்துவதற்கு இந் நாடுகளுக்கும் பாதுகாப்பு சபையில் நிரந்தர இடங்கள் வழங்கப்படுதலானது வரவேற்க தக்கவிடயம் ஒன்றாகும்.

இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? ஆராய்க.

6. சாங், ரிகோ அரசின் அதிக எண்ணிக்கையான பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகையொன்றின் கார்டூன் வரைவாளர் ஆவர், அவர் பபுலோ(United States of Babulo (USB)) நாட்டின் ஜனாதிபதியை உலகின் முன்னணி பயங்கரவாதி என்ற வகையில் விளக்கி கார்டூன் ஒன்றை பத்திரிகையில் பிரசுரித்தார். இந்த கார்டூன் இணையத்தளம் ஊடாக பெருமளவு பிரசித்தம் பெற்றது. இந்த கார்டூன் பபுலோவில் பெருமளவில் பிரச்சினையை தோற்று வித்தது, எனவே USB, சாங்கிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவ்வாறு எடுக்காவிடில் ரிகோ பொருளாதார உறுத்தங்களுக்கு முகங் கொடுக்க நேரிடும் எனவும் ரிகோ ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தது. இதன் விளைவாக ரிகோன் பொலிஸார் சாங்கை கைது செய்தனர். சாங் மனித உரிமைகளுக்கான அனைத்துலக பிரகடனத்தின் உறுப்புரை 19 மீறப்பட்டுள்ளதாக கூறி ரிகோவின் அதி உயர் நீதிமன்றத்தில்(apex court of Rico) தாக்கல் செய்ய விரும்புகிறார். ரிகோ, குடியியல் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தை அங்கீகரித்துள்ளது(ICCPR).

OPEN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

(அ) சாங்கிற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) ரிகோ ICCPR ற்கு ஒரு திறத்தவராக இல்லாதவிடத்து உமது ஆலோசனை வேறுபடுமா?

7. (அ) ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் உறுப்புறை 2(4) உறுப்பினர்களால் ஏனைய எந்தவொரு நாட்டிற்கும் எதிராக பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதை முற்றாக தடை செய்கிறது. இந்த தடையானது பட்டயத்தின் உறுப்புரை 51ல் வழங்கப்பட்ட ஓர் குறுகிய காப்பு வாசகத்திற்கு அமைவானதாகும். உறுப்புரை 51ன் பயனுறுவிளைவானது தற்பாதுகாப்பில் பலாத்காரம் பிரயோகிக்கும் உரிமையை இந்த உறுப்புரையில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுக்கு மட்டும் கடுமையாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

நீர் ஏற்றுக்கொளகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(ஆ) ஒலு, 1960ம் ஆண்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் சிவில் யுத்தத்தில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடொன்றாகும். மக்கள் முன்னணி அமைப்பானது (LOP) ஒலுவின் தென்பகுதியில் ஒரு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது. ஒலு அரசாங்கம், மக்கள் முன்னணி அமைப்பிற்கு கோலு அரசும், உடோபியா குடியரசும் இராணுவ வழிமுறைகளில் ஆதரவு வழங்கி வருகின்றன என சந்தேகிக்கின்றது. எனவே இவ்விரண்டு நாடுகளும் மக்கள் முன்னணி அமைப்பிற்கு ஆதரவு வழங்குவதை நிறுத்தாதுவிட்டால் அந்நாடுகளுக்கு எதிராக பலாத்காரம் பிரயோகிக்கப்படும் என அச்சுறுத்தியது. ஒலுவினுடைய இரகசிய தகவல் இலாகா, கோலு துறைமுகத்தில் பல யுத்தக்கப்பபல்கள் நிறுத்தப்பட்டிருந்தமை பற்றிய நம்பத்தகு தகவல்களை சேகரித்தது. இத்துறைமுகம் ஒலுவின் ஆட்புல எல்லைக்கு மிகவும் அண்மித்ததாக இருந்தது. இங்கிருந்து ஒலிவின் தென்பகுதிக்கு செல்வதற்கு ஒரு சில நிமிடங்களே எடுக்கும்.

ஒலுவின் படைகள் கோலு துறைமுகத்தில் தாக்குதலை நடத்தி இரண்டு யுத்த கப்பல்களை நாசப்படுத்தியது ஒரு கப்பலை கைப்பற்றியது. கோலு இவ் விடயத்தை சர்வதேச நியாய நீதிமன்றத்தின் முன் எடுத்துச்செல்கிறது.

ஒலு அரசின் சார்பாக ஆஜராகும் சிரேஷ்ட சட்டத்தரணிக்கு உதவி வழங்கும் குழுவின் தலைவராக உம்மை கருதி, ஒலுவினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலை நியாயப்படுத்திக் கூடிய வகையிலான அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

அறிக்கையை தயாரிக்க.

8. பின் வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை பற்றி குறிப்பெழுதுக.

(அ) சர்வதேச சடடத்தில் வேற்றரசுக்கு ஒப்படைத்தல்(Extradition in International Law)

(ஆ) அரசு எண்ணக்கரு பற்றிய சட்டம்(The act of state doctrine)

(இ) சர்வதேச சட்டத்தில் பிணக்குகளை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரும் வழிவகையாக நடுத்தீர்ப்பு (Arbitration as a mode of dispute settlement in International Law)

(பதிப்புரிமையுடையது)